# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு மே மாதம் 24-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 40 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆனந்த்பாபு | வயது | 37/2022 |
| தகப்பனார் பெயர் | பால்ராஜ் | ஜாதி | |
| தொழில் | தனியார் நிறுவனத்தில் | மதம் | |
| ஊர் | சொக்கன்புதூர் | தாலுக்கா | கோயம்புத்தூர் |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது கோவை சொக்கன்புதூரில் வசித்து வருகிறேன். தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். ஆஜர் 1வது எதிரியை தெரியும். 2 வது எதிரியை தெரியாது. 2018 ம் வருடம் பிப்ரவரி மாததத்தில் தேதி ஞாபகம் இல்லை. கோர்ட்டில் அட்டெண்டர் வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி சொன்னார். 1வது எதிரியை எனக்கு எனது அண்ணன் தீபக் மாமனார் மூலம் தெரியும். எனது அண்ணனுக்கு திருவாரூர் திருமணம் செய்துள்ளோம். வேலை வாங்கி தருவதற்கு ரூ.2 லட்சம் கொடுக்குமாறு 1வது எதிரி கேட்டார். முன்பணமாக ரூ.1லட்சம் கேட்டார். 2018 பிப்ரவரி மாதத்தில் ரூ.1 லட்சம் அவர் கேட்டபடி அட்வான்ஸாக 1வது எதிரி வீட்டில் வைத்து கொடுத்தோம். 1வது எதிரி வீட்டிற்கு போனபோது அங்கு ஒரு லேடியும் இருந்தார். அவரை எனக்கு தெரியாது. பணம் கொடுக்கும்போது என்னுடைய பையோடேட்டா விபரங்களையும் நான் கொடுத்தேன். பின்னர் 2 மாதம் கழித்து 1வது எதிரியிடம் போய் கேட்டபோது ஆர்டர் இன்னும் வரவில் லை என்று சொன்னார். அதன் பின்னர் கேட்டதற்கு கோர்ட் லிவு என்று சொன்னார். சிறிது காலத்திற்கு பின்னர்தான் 1வது எதிரி ஏமாற்றிய விபரம் தெரிந்தது. 1வது எதிரி கோர்ட்டில் வேலை பார்க்கும் ஒரு லேடி மூலம்தான் வேலை வாங்கி தருவதாக சொல்லி ஏமாற்றி உள்ளார் என்று சொன்னார்கள். அந்த லேடி பெயர் எனக்கு தெரியாது. வேறு ஒருவரும் ஏமாந்து புகார் கொடுத்தாக சொன்னார்கள். 83 பேர் பணம் கொடுத்ததாக

சொன்னார்கள். நானும் பணம் கொடுத்ததால் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் 1வது எதிரி சக்திவேலை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நேரடியாக பார்த்தேன். 1வது எதிரி வேலை வாங்கி தருவதாக யார் என்னிடம் சொன்னார்கள் என்றால் எனது அண்ணன் மாமனார் சொன்னார். எனது அண்ணன் மாமனார் பெயர் சவுந்தரராஜன் ஆகும். எனது அண்ணன் மாமனார் சவுந்தரராஜன் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. எனது அண்ணன் மாமனார் சவுந்தரராஜனை விசாரித்தால்தான் வழக்கின் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. நான்தான் நேரடியாக பணம் கொடுத்தேன். 1வது எதிரி நீதிமன்றத்தில் பணியாற்றுகிறாரா என எனக்கு தெரியாது- நீதிமன்றத்தில் பணியாற்றும் ஒருவர் மூலம் வேலை வாங்கி தருவதாக சொன்னார். 1வது எதிரி சக்திவேல் வேறு ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. போலிசார் என்னை ஒருமுறை விசாரித்தார்கள். நான் பணம் கொடுத்ததாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் போலிசார் விசாரணையின்போது கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் 1வது எதிரி சக்திவேலை ஒருமுறைக்கூட பார்த்ததில்லை என்றும், அவரை பார்த்ததாக நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் பணம் கொடுத்து ஏமாந்து இருந்தால் தனிப்பட்ட புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. வேலை வாங்கி கொடுப்பார்கள் என்று நம்பியிருந்தேன். 1வது எதிரியை மையப்படுத்தி 2வது எதிரியை தெரியாது என பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

போலிசார் என்னை விசாரித்தபோது நீதிமன்றத்தில் பணியாற்றும் ஒருவர் மூலம் வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி சொன்னார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன். வழக்கிற்காக 1வது எதிரி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் முதன்முறையாக நீதிமன்றத்தில் அவ்வாறு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு மே மாதம் 24-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 41 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுகபிரம்மம் | வயது | 59/2022 |
| தகப்பனார் பெயர் | சீத்தாராமன் | ஜாதி | |
| தொழில் | பால் வியாபாரம் | மதம் | |
| ஊர் | புலியஞ்சேரி | தாலுக்கா | குடவாசல் |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது புலியஞ்சேரியில் வசித்து, பால்வியாபாரம் செய்கிறேன். எனக்கு ஆஜர் எதிரிகளை தெரியாது. சாட்சி மீண்டும் 1வது எதிரியை பணம் கொடுத்ததாகவும், அதற்கு முன்பு பார்த்ததில்லை என்று சொல்கிறார். எனது கொழுந்தியா பையன் மருதப்பட்டிணம் எம்.ஜி.ஆர். நகரில் வசித்து வருகிறார். அவரது பெயர் தினேஷ். அவருக்கும் மதர்தெரசா ஐ.டி.ஐ. செல்வத்திற்கு பழக்கம் உள்ளது. செல்வம் என்பவர் தினேஷ் மூலம் பணம் ஏற்பாடு செய்யுங்கள், நீதிமன்றத்தில் வேலை உள்ளது . எனது மகன் வேல்முருகனுக்கு வாங்கி தருவதாக சொன்னார்கள். 2018 மார்ச் மாதத்தில் உடனடியாக கட்ட வேண்டும் என்பதால் ரூ.2,60,000/- கேட்டு, ரூ.1 லட்சம் அட்வான்ஸாக கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். அதன்படி நான் உடனடியாக ரூ.1 லட்சம் ரூபாய் ஏற்பாடு செய்து 1வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு போனோம். செல்வம் என்னை அழைத்துக்கொண்டு போனார். அவர்மூலம் 1வது எதிரி சக்திவேலிடம் மாலை 6.00 மணிக்கு பணம் ரூ.1 லட்சத்தை கொடுத்தோம். தேதி ஞாபகம் இல்லை. மூன்று மாததிற்குள் வேலைவாங்கி தருவதாகவும், இலலை என்றால் பணத்தை கொடுத்துவிடுவதாகவும் சொன்னார். அதன் பின்னர் பலமுறை வந்து கேட்டோம். வேலை வந்துவிடும், வேலை வந்துவிடும் என்று சொன்னார்கள். வேலைவரவில்லை. பணம் கேட்டும் கொடுக்காததால் எஸ்.பி. ஆபீஸிற்கு புகார் கொடுக்க போனோம். அங்கு ஏற்கனவே சுரேஷ் என்பவர் புகார் கொடுத்துள்ளதால் எங்களை சாட்சிகளாக

சேர்ந்துக்கொள்ளவதாக சொன்னார்கள். 1வது எதிரி சக்திவேல் எங்களிடம் ஜட்ஜ் வீட்டில் வேலை செய்பவர் மூலமாக கொடுக்க போவதாக சொன்னார். 1வது எதிரி சக்திவேலிடம் பலமுறை பணம் கேட்டும் கொடுக்கவில்லை. நான் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னார்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

என்னிடம் நீதிமன்றத்தில் வேலை இருப்பதாக யார் சொன்னார்கள் என்றால் மதர்தெரசா செல்வம் மூலம் தினேஷ் என்பவர் சொன்னார். 1வது எதிரி சக்திவேல் என்னிடம் பணம் வேண்டும் என்று நேரடியாக கேட்கவில்லை என்றால் சரிதான். செல்வம் மூலம் கேட்டார். 1வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்யவில்லைஎ ன்று தெரியும். எப்படி வேலை கிடைக்கும் என்றால் நீதிமன்றத்தில் வேலை செய்பவர் மூலம் கிடைக்கும் என்று சொன்னார். 2வது எதிரி எங்கு குடியிருந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது- நான் பணம் கொடுக்கும்போது 2 வது எதிரி 1வது எதிரியின் வீட்டில் 2 வது எதிரி வாடகைக்கு குடியிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பணம் கொடுத்ததிற்கு ஆவணம் உள்ளதா என்றால் ஆவணம் எதுவும் எழுதி கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். நான் பணம் கொடுத்தபோது செல்வம் மற்றும் எனது தாய்மாமன் சுவாமிநாதன் ஆகியோர் உடன் இருந்தார்கள். வேலை கிடைக்கவில்லை என்று தெரிந்த பின்னர் நான் போய் 1வது எதிரியிடம் கேட்டேன். நான் 1வது எதிரி சக்திவேலிடம் கேட்டபோது அவர் 2 வது எதிரியிடம் போன் செய்து கேட்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் 1வது எதிரி உங்கள் பணத்தை நாங்கள் வைத்துக்கொள்ளவில்லை, கோர்ட்டில் வேலை பார்க்கும் நபரிடம்தான் கொடுத்துள்ளேன் என்று சொன்னார். 1வது எதிரி வசம் நான் கொடுத்த பணம் இல்லை என்ற விஷயத்தை 1வது எதிரி சொல்ல நான் தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சி செல்வத்தை விசாரித்தால்தான் முழுவிபரம் தெரியவரும் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

1வது எதிரி ஜட்ஜ் வீட்டில் வேலை செய்பவர் மூலம் வேலை வாங்கி கொடுக்க போவதாக சொன்னார் என்று நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரமும், 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் நீதிமன்றத்தில் வேலை செய்யும் நபர் மூலம் வேலை கிடைக்கும் என கூறியதாக நான் சொன்ன விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 1வது எதிரி சொன்னதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் சரிதான். 1வது எதிரி என்னை

ஏமாற்றி பணம் பெறுவதற்காக மேற்கண்ட விபரங்களை கூறி என்னிடம் ஆசை வார்த்தை காட்டியுள்ளார் என்றும், விபரம் அறியாமல் அதனடிப்படையில் நான் பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு மே மாதம் 24-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 42 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வேல்முருகன் | வயது | 29/2022 |
| தகப்பனார் பெயர் | சுகபிரம்மம் | ஜாதி | |
| தொழில் | நான் தனியார் துறையில் வேலை செய்கிறேன். | மதம் | |
| ஊர் | புளியஞ்சேரி | தாலுக்கா | குடவாசல் |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது புளியஞ்சேரியில் வசித்து வருகிறேன். கும்பகோணத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். எனக்கு ஆஜர் 1வது எதிரியை தெரியும். 2வது எதிரியை பார்த்ததில்லை. எனது சித்தி மகன் தினேஷ் என்பவர் கோர்ட்டில் அட்டெண்டர் வேலை உள்ளது என்றும், பணம் கட்டி வாங்கிக்கொள்ளலாம் என்றும், செல்வம் என்பவர் மூலம் தெரியவந்ததாகவும் 2018ம் வருடம் மார்ச் மாதம் சொன்னார். தினேஷ் எங்களை செல்வத்திடம் அழைத்து போனார். செல்வம் 1வது எதிரியிடம் அழைத்து போனார். எனது பையோ டேட்டா, சர்டிபிகட் செராக்ஸ் மற்றும் ரூ.1 லட்சம் பணம் ஆகியவற்றை 1வது எதிரி சக்திவேலிடம் கொடுத்தோம். வேலை வாங்கி தருவதாக சொன்னார். ஜூன் மாதத்தில் வேலைவந்துவிடும் என்றும், கால்பார் வந்தவுடன் போய் அட்டெண்ட் செய்யுமாறு சொன்னார். அவர் சொன்னபடி வேலை வராததால் போய் கேட்டதற்கு வேலை வந்துவிடும், வந்துவிடும் என்று சொன்னார். ஒரு வருடமாகியும் வேலை கிடைக்கவில்லை அதன் பிறகு போலிசார் போன் செய்து என்னை வரச்சொன்னார்கள். என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள். 1வது எதிரி சக்திவேல் அவரது வீட்டில் குடியிருக்கும் ஒருவர் மூலம் பணம் கொடுத்து வேலை வாங்கி தருவதாக சொன்ன விபரம் தெரியவந்தது.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

செல்வம் என்பவரை எனது சித்தி மகன் தினேஷ் மூலம் தெரியும் . தினேஷ் மற்றும் வேலை வாஙகிதருவதாக செல்வம் சொன்னார். நீதிமன்றத்தில் அட்டெண்டர் வேலை வாங்கி தருவதாக சொன்னார்கள். பணம் கொடுக்க நான், எனது அப்பா, எனது மாமா சாமிநாதன் ஆகியோர் போனோம். தேதி எனக்கு ஞாபகம் இல்லை. பணம் கொடுத்ததிற்கு எழுத்துபூர்வமாக எதுவும் 1வது எதிரி எழுதி கொடுக்கவில்லை. 2 வது எதிரி நீதிமன்றத்தில் வேலை செய்வதால் வேலை கிடைக்கும் என்று நம்பி பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் தனிப்பட்டமுறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. போய் கேட்டேன். நான் பணம் கொடுத்ததிற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாததால் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

இதுநாள் வரை 1வது எதிரியிடம் கொடுத்த பணத்தை கேட்டு வருகிறேன் என்றால் சரிதான். 1வது எதிரியிடம் நான் பணம் கேட்டபோது 2வது எதிரியை வழக்கில் சம்பந்தப்படுத்தி சாட்சியமளியுங்கள் நான் பணத்தை கொடுத்துவிடுகிறேன் என என்னிடம் ஆசை வார்த்தை கூறியதால் அதனை நம்பி நான் 2வது எதிரி நீதிமன்றத்தில் வேலை பார்த்ததால் வேலை கிடைக்கும் என்று நம்பி பணம் கொடுத்தேன் என 2 வது எதிரிக்கு எதிராக விபரங்கள் எதுவும் தெரியாமல் தற்போது நீதிமன்றத்தில் முதன்முறையாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No.25/2020

2022-ம் ஆண்டு மே மாதம் 24-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ..சா. 43 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புஷ்பவள்ளி | வயது | 61/2022 |
| தகப்பனார் பெயர் | அன்பழகன் | ஜாதி | |
| தொழில் | இயற்கை மூலிகை பொடி வியாபாரம் | மதம் | |
| ஊர் | தஞ்சாவூர் | தாலுக்கா | தஞ்சாவூர் |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது தஞ்சாவூரில் வசித்து மூலிகை பொடி வியாரம் செய்து வருகிறேன். 1வது எதிரி சக்திவேலை தெரியும். 2வது எதிரி 1வது எதிரி வீட்டில் குடியிருந்ததாக சொன்னார்கள். நான் பார்த்தது இல்லை. 1வது எதிரிக்கு மூலிகை பொடி வியாபாரம் செய்த வகையில் 1வது எதிரி எனக்கு 10 வருடம் பழக்கம். அவ்வாறு மூலிகை பொடி கொடுக்க வரும்போது 1வது எதிரி வீட்டில் 4, 5 நபர்கள் இருந்தார்கள். அவர்கள் யார் என்று நான் கேட்டபோது சக்திவேல் அம்மா கோர்ட்டில் வேலை வாங்குவதற்கு பணம் கொடுப்பதற்காக வந்துள்ளார்கள்என்று சொன்னார். எனது மகன் பி.டெக்., படித்துவிட்டு இருந்ததால் அவனுக்கு வேலை வாங்கலாம் என நானும் கேட்டபோது 1வது எதிரி அவர் வீட்டில் குடியிருக்கும் கோவிந்தலெட்சுமி கோர்ட்டில் வேலை செய்வதாகவும், அவர் மூலம் வேலை வாங்கலாம் என்றும் அதற்கு ரூ.2 லட்சம் வேண்டும் என்றும் சொன்னார்கள். 2018 பிப்ரவரியில் ரூ.1 லட்சத்தை 1வது எதிரியிடம் கொடுத்தேன். நான் கொடுத்த பணம் ரூ.1 லட்சத்தை 1வது எதிரி வாங்கி அவரது அம்மாவிடம் கொடுத்து சாமி படத்தின் முன்னர் வைக்க சொன்னார். நான் பணம் கொடுப்பதற்கு முன்பாக வேறு ஒரு நபர் கொடுத்த பணமும் சாமி படத்தின் முன் இருந்தது. நான் கொடுத்த பணத்தையும், ஏற்கனவே இருந்த பணத்தையும் 1வது எதிரி ஒரு கவரில் போட்டு எடுத்துக்கொண்டார். எனது மகனின் பையோடேட்டாவையும் வாங்கிக்கொண்டு என்னை விளமல் பாலத்தில்

பஸ்ஸிற்கு இறக்கிவிட்டு விட்டு ஜட்ஜ் அம்மா வீட்டிற்கு போய் பணத்தை கொடுக்க போவதாக சொல்லிவிட்டு போனார். மூன்று மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார். வேலை கிடைக்கவில்லை. நான் மீண்டும் போய் கேட்டேன். போனில் கேட்டேன். பணம் கிடைக்கவில்லை. திருவாரூர் எஸ்.பி. ஆபீஸில் இருந்து போன் செய்து கேட்டபின்னர் எஸ்.பி. ஆபீஸ் வந்து விபரத்தை எழுதி கொடுத்தோம். போலிசார் விசாரித்தார்கள். அதன் பிறகு கோவிந்தலெட்சுமியும் ஜட்ஜ் அம்மாவும் ஏமாற்றி விட்டார்கள் என சொல்லிக்கொண்டார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்) - இல்லை**

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

நான் தற்போது 1வது எதிரியிடம் கொடுத்த பணத்தை கேட்டு வருகிறேன் என்றால் சரிதான். 1வது எதிரி பணம் கொடுப்பதாக சொல்லி வருகிறாரா என்றால் வழக்கு முடிந்தால் கொடுப்பார்கள் என்று சொன்னார். போலிசார் என்னை விசாரித்தபோது கோவிந்தலெட்சுமியும், ஜட்ஜ் அம்மாவும் ஏமாற்றி விட்டார்கள் என சொல்லிக்கொண்டார்கள் என்ற விபரத்தை நான் சொன்னேனா என்றால் சொன்னேன். 1வது எதிரி என்னிடம் பணத்தை கொடுத்து விடுகிறேன் என ஆசை வார்தை கூறி கோவிந்தலெட்சுமியும், ஜட்ஜ் அம்மாவும் ஏமாற்றிவிட்டதாக போலிசார் விசாரணையில் கூறாதநிலையில் நீதிமன்றத்தில் முதன்முறையாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் முதல் விசாரணையில் 1வது எதிரி வீட்டில் ஒரு நபர் குடியிருக்கிறார், அவர் கோர்ட்டில் வேலை செய்கிறார், அவர் பெயர் கோவிந்தலெட்சுமி என நான் சொல்லியுள்ள விபரங்கள் 1வது எதிரியும் அவரது தயாரும் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். 1வது எதிரியும்,அவரது தாயாரும் என்னை திட்டமிட்டு பொய்யாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல.